UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)
ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19 - 4 Oct - Dec 2025
Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# நீலகிரி படகரின வழிபாடும், இருளரின மக்களும்

**இரா. அசோக்**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் 641 020

**முனைவர் தே. ராஜகுமார்**
நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

**ஆய்வுச் சுருக்கம்**

மனித வாழ்வில் வழிபாடு என்பது மக்களின் நம்பிக்கையில் ஒன்று. பூலோகத்தில் மனிதராய்ப் பிறந்தவர்கள் அனைவரும் ஓரினமே அவர்களின் வாழ்வு இடத்திற்கு ஏற்ப கலாச்சாரம், பண்பாடு, வாழ்வியல் மற்றும் தொழில்களின் மாற்றம் காண முடியும். மனிதன் தொழில்களில் மாற்றம் கண்டமையால் மனிதன் தனது ஆறறிவால் இனப் பிரிவைக் கொண்டு வந்து மற்ற இனங்களை இழிவுபடுத்துவது ஏற்புடையது அல்ல. பூலோகத்தில் மாற்றம் ஒன்றுதான் மாறாத ஒன்று என்பதை அகத்தில் பதிய வைப்போம். படகர், இருளர் இன மகக்களின் ஒற்றுமையைப் பறைசாற்றுவதே இவ்வாய்வு.

**திறவுச் சொற்கள்**

ஜாலே ஊ, கக்குளி, ஜீவதளை, ஹட்டி, தெவ்வ ஹப்ப, தம்பட்டெ, பீக்கே, தேவுருக்கோளு, ஆட்டக் கோளு.

## ஆய்வுக் களம்

தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள உதகை வட்டம் கூக்கல் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியாகும்.

## முன்னுரை

தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டம் இயற்கை எழில் சூழ்ந்த மலைத்தொடர்களைக் கொண்ட மாவட்டம். இங்கு முதல் மொழி தமிழாக இருந்தாலும் பல்வேறு பேச்சு மொழிகளையும் மாறுபட்ட சடங்கு முறைகளையும் கொண்ட மாவட்டம். இங்கு இருளர், தொதவர், கோத்தர், குறும்பர், பணியர், படகர் என பல்வேறு குடிகள் வாழ்ந்து வருகின்றனர். இம்மக்கள் அவர்களுக்கென தனித்தனி தாய் மொழியினை (எழுத்து வடிவம் இல்லை) உடையவர்கள் அவர்களின் சடங்குகள், வாழ்விடம், பாரம்பரிய உடை, உருவ அமைப்பு அனைத்தும் அவர்களிடம் தனி அடையாளமாகப் பார்க்கப்படுகிறது.

## நீலகிரிவாழ் இருளர்கள்

நீலகிரி பழங்குடியின மக்களாக வாழக்கூடிய இருள இன மக்களின் வாழ்விடங்கள் இருண்ட காடுகளாக உள்ளது. இதனை “இருட்ட காடுகளுக்குள் சென்று வாழ முற்பட்டதால் இந்த இனம் இருளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்” என்கிறது. இருளர்களின் வாழ்வும் வரலாற்று பூர்வீகமும் பக்கம்-3.

இருளர்கள் பெரும்பாலும் ஒல்லியான தேகத்துடனும், கன்னங்கள் ஒட்டியும், கருமை நிறம் உடையவர்களாகவே காணப்படுகின்றனர். “நீலகிரி இருளர் ராக்கிகார்ஹி மக்களின் வழி

வந்தவர்கள் என்பதை வசந்த் ஷிண்டே வாகீஷ் நரசம்மன் ஆகியோர்களின் மரபணு ஆய்வின் மூலம் உறுதியாகிறது” என்கறார். பக்தவத்சல பாரதி, தமிழ்பண்பாட்டு வரலாறு இனவரலாறு பக்கம் – 10.

இருளர்களின் மொழி “இருள மொழி” என அழைக்கப்படுகிறது. இம்மொழி இருளாக மக்களிடையே பேச்சு மொழியாகவே காணப் படுகிறது. இதனை “தென்திராவிட மொழி குடும்பத்தை சார்ந்தது” என்கிறார். ஆர். பெரியாழ்வார் இருளர் (ஆய்வு கட்டுரை), தமிழக பழங்குடி மக்கள் பக்கம் -78.

### படகரின மக்கள்

நீலகிரி மாவட்டத்தில் 400க்கும் மேற்பட்ட ஹட்டிகளில் (ஊர்) வாழக்கூடிய மக்கள். இவர்களின் இவர்களின் எழுத்து மொழி தமிழாக இருந்தாலும் பேச்சு மொழி படுக மொழி தான் இவர்களின் சடங்கு முறைகள், வழிபாடுகள், கலாச்சாரம், பண்பாடு போன்ற வற்றில் பல மாற்றங்கள் காண முடிகிறது.

### படகர், இருளர் மக்களின் ஒற்றுமை

மாரியம்மன் திருவிழாவில் மட்டுமல்ல பல நிகழ்வுகளிலும் படகரின மக்கள் இருளர் களிடம் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். இவர்களின் சுப நிகழ்வு துக்க நிகழ்வுகளி லும் இனபாகுபாடின்றி பங்கு கொள்கின்றனர். இனங்கள் மாறுபட்டாலும் மனிதனின் மனங் கள் மாறுபடாது என்பதற்கு கூக்கல் எட்டூர் மற்றும் எப்பநாடு படகரின மக்களும் சிறியூர் இருளரின மக்களும் எடுத்துக்காட்டாக உள்ளனர்

பல தலைமுறையாக இருளர் வாழ்ந்த பகுதிகளில் எருமை பசு ஆடு போன்ற கால்நடைகளை கூக்கல் எட்டூர் எப்பநாடு படகரின மக்கள் வளர்த்து வந்தனர் இருளர்களும் படகர்களும் இருப்பிடம் சாலை வழியில் தொலைதூரம் இருக்கலாம். ஆனால் வனத்தின் வழியே பண்டைய மக்கள் பயன்படுத்திய நடைப்பாதை குறைவான தூரம் தான். பண்டைய நாள் முதல் நட்பாக ஒற்றுமையுடன் வாழ்ந்த சமூகம் தான் படகரின மக்களும் இருளரின மக்களும்.

### கூக்கல் எட்டூர் வழிபாடு

மக்களின் வழிபாடுகளில் ஹெத்தையம்மன் திருவிழா, தெவ்வஹப்ப (குல தெய்வம்) சிவன் கோவிலில் தைப்பூசத் திருவிழா, காளியம்மன் திருவிழா, கிருஷ்ண ஜெயந்தி, முனிஸ்வரர் திருவிழா மற்றும் சிறியூர் மாரியம்மன் திருவிழா ஆகியவையாகும் இதில் சிறியூர் வனப் பகுதியில் அமைந்தி ருக்கும் மாரியம்மன் திருக்கோயில் சிறு தெய்வ வழிபாட்டில் படகரின மக்களுடன் இருளரின மக்களும் சேர்ந்து வழிபாட்டின் அங்கமாக விளங்குகின்றனர்.

### திருக்கோயில் பூசாரிகள்

படுகர் இன மக்கள் கோயில் நிர்வாகத்தை நிர்வாகித்தாலும் முக்கிய பூசாரிகளாக படகர் இனத்தைச் சேர்ந்த திரு.தோனன் திரு. ராஜேஷ் பூசாரிகளும் இருளார் இனத்தை சேர்ந்த திரு.குமார் திரு. சசிகுமார் பூசாரி களும் உள்ளனர்.

இருளரின பூசாரி முக்கியத்துவம் பூசாரி களாக இருக்கக்கூடிய இருவருக்கும் முக்கிய பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது கருவறையில் மாரியம்மனை அலங்காரம் பூசைகள் செய்வது திரு. குமார் பூசாரியாகவும், திருவிழா நாட்கள் கம்பம் நடும் நிகழ்வில் திரு. சசிகுமார் பூசாரிகளும் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

### பூச்சாட்டு விழா

திருவிழாவில் பொழுது அம்மனின் திருவுருவ செம்பு சிலைகளில் ஒன்று உயிலட்டி தொட்டமனையில் உள்ளது. அந்த சிலைக்கு பூஜைகளை திரு.தோனன் மற்றும் திரு.ராஜேஷ் செய்கின்றனர். அம்மன் சிலை முதல் நாள் இரவே அலங்கரித்து பூஜைகள் செய்து மறுநாள் காலை அலங்கரித்தப் பெட்டியில் அம்மன் சிலை வைத்து கூக்கல், தேகிலி, குருமுடி, சீகுலா, கூக்கல்தொரை ஊர்களின் மக்களுக்கு அம்மன் அருள் பாவித்து வனப் பகுதி வழியாக நடந்து சென்று திருக்கோவில் அடைகின்றனர். அன்று இரவு பூச்சாட்டு விழா சிறியூர் திருக்கோவிலில் நடைபெறுகிறது

### கம்பம் நடுவிழா

செவ்வாய் இரவு அம்மன் அருளால் வெட்டி மறைத்து வைத்தக் கம்பத்ததைக் கண்டு பிடித்து கம்பம் நடுகின்றனர். அது இருளராக இருந்தாலும் சரி படகராக இருந்தாலும் சரி யார் கண்ணில் கம்பம் தென்படுகிறதோ அவர்தான் எடுத்து வருவார் கம்பத்தில் எரியும் அக்னிக்கு பயன்படுத்தப் படும் மரம் ‘ஜீவ தலை’ என்ற காட்டு மரங்களின் மரத்துண்டு எடுத்து வருகின்றனர். இதற்கான பொறுப்பு இருளர் இனப் பூசாரி திரு. சசி குமார்ருக்கு உரியது. புதன்கிழமை காலை முதல் செவ்வாய்க்கிழமை இரவு வரை கம்பத்திற்கு அக்னி ஏற்றி கம்பத்தைச் சுற்றி இருளர்களும், படகர்களும் நடனம் ஆடுவர் எட்டு நாட்களும் கம்பத்தின் மேலே எரியும்

அக்னியை அணைய விடமாட்டார்கள்.

### இருளரின இசைக்கருவிகள்

இவர்கள் “இசைக்கருவிகளைப் பயன்படுத்து வதில் வல்லவர்கள், இருளர்கள் பயன் படுத்தும் இசை கருவிகளை தோற்கருவிகள், துளைக் கருவிகள் என்று இருவகையாகப் பிரிக்கலாம்.” இருளரும் இசையும் ஆர் பெரியாழ்வார் (ஆய்வு கட்டுரை) மக்களும் மரபுகளும் பக்கம்-119. அந்த இசைக் கருவி கள் “கூக்கல் எட்டுர் மட்டும் இல்லாமல் எப்ப நாடு, கெங்கமுடி, இடுஹட்டி, தொரையட்டி என பல ஊர் திருவிழாக்களும்” இடம் பெறுகின்றது. இருளரின மக்களின் இசையை அறக்கோல் என்று படகரின மக்கள் அழைப்பார்கள்.

### இருளர் இசை

இருளர் இசை கேட்ப படகர் என மக்கள் தங்கள் பாரம்பரிய நடனங்களை ஆடுவார் கள். திருவிழாவின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை இவர்களின் இசை முக்கியத்து வம் வகிக்கும். தேவருக்கோளு, ஆட்டக் கோளு என இசையை இரு பிரிவாக பிரிக்கின்றனர். தேவருக்கோளு என்பது அம்மனின் பூஜை செய்யும் பொழுது, அம்மனை அழைத்து வரும்பொழுது பயன் படுத்தப்படும் இசையாகும்.

### திருக்கோவிலின் முக்கிய விழா நாட்கள்

சிறியூர் மாரியம்மன் திருக்கோவில் திங்கள் செவ்வாய் முக்கிய நாளாக பார்க்கப்படுகிறது அதில் அன்னதானம், கருவறையில் அம்மன் அலங்காரத்தோடு மக்களுக்கு காட்சியளித்து அருள் வழங்குதல், பூக்குண்டத்திற்கு மரம் கொண்டு வருதல், மேடை நாடகம், விரதம் இருந்து மக்கள் பூக்குண்டம் இறங்குதல் போன்ற நிகழ்வுகள் நடைபெறும். கார்த்திகை தீப நாள் எந்த நாள் வந்தாலும் திருக் கோவில் திங்கள் மட்டுமே தீபம் ஏற்றும் விழா நடைபெறும் இந்நிகழ்வில் திருவிழா போலவே பல ஊர் மக்கள் கோவிலுக்கு வருகின்றனர்.

### இருளர் வழிபாட்டில் படகர் மக்கள்

இருளர் இன மக்களால் நடத்தப்படும் மாசிக்கரியபண்டன் திருக்கோவில் விழாவில் படகரின மக்கள் திரளாக வருகை புரிந்து திருவிழாவைச் சிறப்பாக நடத்துகின்றனர். இவ்விழாவில் அன்னதானத்தைத் தயார் செய்வதில் படகர் முக்கியப் பங்காற்றுகின் றனர். இவ்விழாவில் எப்பநாடு, கெங்கமுடி, கூக்கல் எட்டுர் மக்கள் விழாவில் பங்கு கொள்வது மட்டுமின்றி ஊரில் உழவு வேலை செய்வதில்லை.

### முடிவுரை

மனிதன் தன் இனப்பிரிவு தான் உயர்ந்தது என்று மற்றவர்களை இகழ்ந்து பேசுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை உணர்த்தும் ஆய்வுக்கட்டுரை. பழங்குடியினர் என்றால் பல நூற்றாண்டுகளாய் பழமை மாறாமல் தங்கள் கலாச்சாரத்துடனும் மக்கள் ஒற்றுமையுடனும் தங்கள் பூர்வீக குடியிருப்பில் குடியிருப்பவர்கள் தான் பிற இனத்தை மதிக்க கூடிய தன்மை உடையவர்கள் தான் இந்த இருளரினப் பழங்குடியினர்.

### துணைநூற்பட்டியல்

1. பக்தவச்சலபாரதி - தமிழகப்பழங்குடிகள் முதல்பதிப்பு-2007. அடையாளம்,1205/1, கருப்பூர்சாலைபுத்தாநத்தம்-621 310.
2. பக்தவச்சலபாரதி - தமிழர் பண்பாட்டு வரலாறு இன வரலாறு, முதல்பதிப்பு-2020. அடையாளம்,1205/1, கருப்பூர் சாலை புத்தாநத்தம்-621 310.
3. ஆர். பெரியாழ்வார்- இருளர் (ஆய்வுக் கட்டுரை) தமிழகப் பழங்குடி மக்கள், மொழியியல் துறை ஆராய்ச்சி மாணவர் வெளியீடு -1 முதல் பதிப்பு பிப்ரவரி 1972. பதிப்பாசிரியர் - டாக்டர் ச. அகத்தியலிங்கம்.
4. ஆர். பெரியாழ்வார் - இருளரும் இசையும் (ஆய்வுக் கட்டுரை)மக்களும் மரபுகளும் பதிப்பாசிரியர் நா.வானமா மலை முதல் பதிப்பு: மார்ச் 2018 பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 16(142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14

### தகவலாளர் பட்டியல்

1. திரு. குமார் (வயது -48), சிறியூர், நீலகிரி மாவட்டம்.
2. திரு. சசிகுமார் (வயது-43), சிறியூர், நீலகிரி மாவட்டம்.
3. திரு.தோனன் (வயது-75), உயிலட்டி, நீலகிரி மாவட்டம்.
4. திரு.அல்லிமுத்து (வயது-59),தேகிலி, நீலகிரி மாவட்டம்.
5. திரு.ரமேஷ், (வயது-45), குருமுடி, நீலகிரி மாவட்டம்.
6. திரு.குன்றி (வயது-33) சிரியூர், நீலகிரி மாவட்டம்.